முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2017 யூலை

## (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

(Business Law and Ethics)

2017 – 07 - 15
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடம்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

பக்கங்கள் : 08
வினாக்கள் : 10

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரு மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) ***வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு* ***வினைச் சொல்*** *உள்ளடங்கியிருக்கிறது (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

**வினா 01**

*இல.* ***1.1*** *முதல்* ***1.7*** *வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை அவ்வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் பிரதான கூறுகளாவன (elements) :

(1) இழப்பீடு, தவணைக் கட்டணம், பதிலாளளிப்பு (subrogation)

(2) முன்மொழிவு, தவணைக் கட்டணம், விலக்களிப்பு வாசகங்கள்

(3) தவணைக் கட்டணம், நிச்சயமின்மை, காப்புறுத்தக்கூடிய அக்கறை

(4) முன்மொழிவு, காப்புறுதி செய்யப்பட்ட வரலாறு, விலக்களிப்பு வாசகங்கள்

**1.2** பின்வருவனவற்றுள் பொருட்கள் விற்பனைச் சட்டத்தின் கீழ் ஒரு பொருளாகக் **கருதப்படாதது** எது?

(1) ஒரு மோட்டார் கார்

(2) விற்பனைக்கு முன்னர் காணியிலிருந்து வெட்டப்பட வேண்டியுள்ள அறுவடை

(3) ஒரு கட்டடம்

(4) ஒரு காப்புரிமை (copyright)

**1.3** பின்வருவனவற்றிலிருந்து இழப்பீட்டுக் கோட்பாட்டுடன் **சம்பந்தப்படாத** காப்புறுதியைத் தெரிவுசெய்க.

(1) ஆயுள் காப்புறுதி (2) தீ அபாயக் காப்புறுதி

(3) கடல் காப்புறுதி (4) உடல்நலக் காப்புறுதி

**1.4** பின்வருவனவற்றுள் ஒரு மாற்றத்தகு சாதனம் (negotiable instrument) எது?

(1) ஒரு மாற்றுண்டியல் (2) ஒரு காசோலை

(3) ஒரு வாக்குறுதிச் சீட்டு (4) மேலுள்ள சகலதும்

**1.5** பொருட்கள் விற்பனைச் சட்டத்திற்கிணங்க, பின்வருவனவற்றுள் உட்கிடை நிபந்தனையாக (implied condition) **அமையாதது** எது?

(1) பொருட்கள், விவரணத்துடன் ஒத்திருத்தல் வேண்டும்.

(2) விற்பனையாளர் விற்பனை செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பொருட்கள், மாதிரியுடன் ஒத்திருத்தல் வேண்டும்.

(4) பொருட்கள், எவ்வித மாற்றமுமின்றி இருத்தல் வேண்டும்.

**1.6** பின்வருவனவற்றுள் முகவர் ஒருவரின் கடமை **அல்லாதது** எது?

(1) கவனத்துடனும் திறமையுடனும் செயற்படுத்தும் கடமை

(2) உரிய நேரத்தில் தரகு பெறுவதற்கான கடமை

(3) பொறுப்புக்கூறும் கடமை

(4) இரகசிய இலாபம் உழைக்காத கடமை

**1.7** சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களை கருதுக :

**(a)** FOB ஒப்பந்தங்கள் சாதாரணமாக புறப்படும் துறைமுகத்தின் பெயரைப் பின்பற்றுகின்றன.

**(b)** FOB ஒப்பந்தங்களின் கீழ் ஒரு விற்பனையாளர், புறப்படும் துறைமுகத்தில் கப்பல் நிறுத்தப்பட்டிருக்கும் இடம்வரை பொருட்களைக் கொண்டுசெல்வதற்கான கடப்பாட்டைக் கொண்டிருக்கிறார்.

**(c)** CIF ஒப்பந்தங்களின் கீழ், கப்பலில் பொருட்களை ஏற்றுவதற்கான செலவை விற்பனை யாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

மேலுள்ளவற்றுள் சரியான கூற்று / கூற்றுகளாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம் (2) **(a)** மாத்திரம்

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேற்கூறப்பட்ட எல்லாம்.

*இல. **1.8** முதல் **1.10** வரையான வினாக்களுக்கான சுருக்க விடைகளை வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.8** 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ளவாறு இலங்கை உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள் (Powers of the Supreme Court) இரண்டினைக் (02) கூறுக.

**1.9** தனியார் சட்டம் (Personal Law) மற்றும் பிராந்தியச் சட்டம் (Territorial Law) ஆகியவற்றுக் கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.10** இலங்கை முதலீட்டு சபையின் (BOI) முதன்மைத் தொழிற்பாடுகள் (Primary functions) இரண்டினைக் (02) கூறுக.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

**அமலும் விமலும்** மட்டுமே **வரையறுக்கப்பட்ட A&B கம்பனியின்** பங்குதாரர்களும் பணிப்பாளர்களும் ஆவர். **அமலினதும் விமலினதும்** ஒரு நண்பரான **ஹேமல்** என்பவரை, **அமலும் விமலும் வரையறுக்கப்பட்ட A&B கம்பனியின்** ஒரு பணிப்பாளர் என **வரையறுக்கப்பட்ட OM லாண்ட் டிவெலொப்பர் கம்பனிக்கு** அறிமுகப்படுத்தியிருந்தனர். ஆயினும் அவர் இதுவரை கம்பனியின் ஒரு பணிப்பாளராக நியமிக்கப்படவில்லை. **ஹேமல், வரையறுக்கப்பட்ட A&B கம்பனிக்காக வரையறுக்கப்பட்ட OM டிவெலொப்பர் கம்பனியிடமிருந்து** பெறுமதிமிக்க காணி ஒன்றினை வாங்கியிருந்தார். எவ்வாறாயினும், **வரையறுக்கப்பட்ட A&B கம்பனியானது ஹேமல்** என்பவரை ஒரு பணிப்பாளராக நியமனம் செய்யவில்லை என்றும் காணியை வாங்குமாறு அவரிடம் கூறவில்லை எனவும் தெரிவித்து அக்காணிக்கான கொடுப்பனவைச் செய்ய மறுத்திருந்தது. இதனால் **வரையறுக்கப்பட்ட OM லாண்ட் டிவெலொப்பர் கம்பனியானது** பணத்தினை வசூலிப்பதற்காக **வரையறுக்கப்பட்ட A&B கம்பனியின்** மீது வழக்குத் தொடுத்திருக்கிறது.

**ஹேமல்** என்பவரால் கொள்வனவு செய்யப்பட்ட காணிக்கான கொடுப்பனவைச் செய்ய **வரையறுக்கப்பட்ட A&B கம்பனிக்குப்** பொறுப்புள்ளதா என்பது பற்றி **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 03

**தனபால** என்பவர் **தனசிறி** என்பவரின் பெயரில் ரூ. 100,000/- பெறுமதியான காசோலை ஒன்றை வரைந்துள்ளார் (எழுதியுள்ளார்). வங்கியாளரின் பெயர் மற்றும் ''கைமாறத் தகாதது'' என்ற வாசகம் ஆகியன காசோலைக்குக் குறுக்கே அதன் முகப்பில் எழுதப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், காசோலை மீதான கையொப்பம் தெளிவாக இல்லாதிருந்ததுடன் தொகையானது ரூ.100,000/- என இலக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும், எழுத்தில் ''பத்தாயிரம் ரூபாய்கள் மட்டும்'' என்றவாறே எழுதப்பட்டிருந்தது. இத்தருணத்தில் தனபாலவின் கணக்கில் காணப்பட்ட மீதித் தொகை ரூ. 5,000/- மாத்திரமே ஆகும்.

இக்காசோலை தொடர்பில் வங்கியின் பொறுப்பினை (responsibility) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறைமையானது உண்மையிலேயே ஒரு குறிப்பிடத்தக்க காரணியாக இருக்கிறது. இது பல்வேறு நாடுகளினதும் பல்வேறுபட்ட நாணயங்களை உள்ளடக்குகிறது. சாதாரணமாக, சர்வதேச வர்த்தகத்தின் ஒவ்வொரு ஒப்பந்தமும் கொடுப்பனவு முறைமையுடன்கூடிய ஒரு வாசகத்தை (clause dealing) உள்ளடக்குகிறது.

(a) சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறைகள் இரண்டினைக் (2) **கூறுக.**

(02 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் கூறிய கொடுப்பனவு முறைகளில் ஏதாவது ஒன்றினைப் பற்றி **விபரிக்குக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 05

**பிந்து** என்பவர் **வரையறுக்கப்பட்ட JJ காப்புறுதிக் கம்பனியிடமிருந்து** ஆயுள் காப்புறுதி ஒன்றினைப் பெற்றுள்ளார். இக்காப்புறுதிக் கம்பனி, கடந்த வருட காலப்பகுதியில் ஏதாவது தீவிரமான நோய்க்கு உள்ளாகியிருந்தீர்களா என்பது பற்றி அவரிடம் வினவியிருந்தது. **பிந்து** அண்மையில் தீவிர மாரடைப்பால் (heart attack) அவதியுற்றிருந்ததுடன் அறுவைச்சிகிச்சை ஒன்றுக்கும் உட்பட்டிருந்தார் எனினும் இதுபற்றி காப்புறுதி முகவரிடமோ அல்லது விண்ணப்பப்படிவத்தில் எந்தவொரு இடத்திலுமோ வெளிப்படுத்தி யிருக்கவில்லை. எவ்வாறாயினும், ஒப்பந்தத்தில் நுழைந்ததன் பின்னர், **பிந்து** தீவிர மாரடைப்பின் தாக்கத்திற்கு ஆளானதுடன் சில வாரங்கள் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதற்கிடையில் **பிந்து** ஒரு மாரடைப்பு நோயாளி எனக் கண்டறிந்த காப்புறுதிக் கம்பனி, **பிந்துவின்** உரிமைக்கோரிக்கையை (claim) நிராகரித்திருந்தது.

**பிந்துவின்** உரிமைக்கோரிக்கையை (claim) காப்புறுதிக் கம்பனியால் நிராகரிக்க முடியுமா என்பது பற்றி **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 06

தொழில்சார் ஒழுக்கநெறியின் அடிப்படைக் கோட்பாட்டுச் சவால்களில் சுய அக்கறை அச்சுறுத்தல், சுய மீளாய்வு அச்சுறுத்தல், வலிமை அச்சுறுத்தல், பரிச்சய அச்சுறுத்தல், மிரட்டல் அச்சுறுத்தல் போன்ற அச்சுறுத்தல்களை உட்படுத்தலாம். எவ்வாறாயினும், இத்தகைய அச்சுறுத்தல்களை குறைக்கக்கூடிய அல்லது நீக்கக்கூடிய பாதுகாப்புகளும் (safeguards) காணப்படுகின்றன.

(a) வேலைச் சூழலில் உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் இரண்டினைக் (02) **கூறுக**. (02 புள்ளிகள்)

(b) தொழில், சட்டவாக்கம் மற்றும் ஒழுங்குவிதிகளால் உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் மூன்றைக் (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 07

***அபி, புமி, சுமி*** ஆகியோர் **ABS** பங்குடமையின் பங்காளர்கள் ஆவர். ***வரையறுக்கப்பட்ட* XYZ *கம்பனியானது* ABS *பங்குடமையின்*** ஒரு போட்டியாளர் ஆகும். ***சுமி, வரையறுக்கப்பட்ட* XYZ *கம்பனியின்*** வாடிக்கையாளர்கள் (clients) பற்றிய இரகசியத் தகவல்களைப் பெற்று அத்தகவல்களின் அடிப்படையில் **ABS *பங்குடமைக்கு*** ஆலோசனைகளை வழங்குவதற்காக ***வரையறுக்கப்பட்ட* XYZ *கம்பனியின்*** பணிப்பாளர்களில் ஒருவருக்கு இலஞ்சம் வழங்கியிருந்தார். ***வரையறுக்கப்பட்ட* XYZ *கம்பனியானது*** தங்களுடைய பணிப்பாளர்களில் ஒருவர், **ABS *பங்குடமையின்*** பங்காளர்களில் ஒருவரிடமிருந்து இலஞ்சம் பெற்றுள்ளதைக் கண்டறிந்ததுடன் **ABS *பங்குடமையின்*** சகல பங்காளர்களுக்கு எதிராகவும் வழக்குத் தொடுத்திருந்தது.

***நீங்கள் செய்யவேண்டியது :***

இவ்விடயம் தொடர்பில் **ABS *பங்குடமையிலுள்ள*** ஏனைய பங்காளர்களின் பொறுப்பினை (liability) ***ஆராய்க.*** (10 புள்ளிகள்)

### வினா 08

***நந்தா*** என்பவர் 1990 ஆம் ஆண்டில் ''வீர புருஷய'' என்ற புத்தகத்தை எழுதியதுடன் அப்புத்தகத்திற்கான காப்புரிமையையும் (copyright) பெற்றுக்கொண்டார். அவர் அப்புத்தகத்தை மொழிபெயர்ப்பதற்கான அதிகாரத்தை (authorization) ***ரங்கா*** என்பவருக்கு வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், நந்தா 2000 ஆம் ஆண்டு இறந்து விட்டார். மொழிபெயர்ப்பை வெளியிட்டதன் பின்னர், ***ரங்கா*** அதே தலைப்பான ''வீர புருஷய'' என்ற தலைப்பின் கீழ் புதிய புத்தகங்களை வெளியிட ஆரம்பித்தார். இதனால் ***நாந்தா***வினுடைய பிள்ளைகள் காப்புரிமைச் சட்டத்தின் கீழ் ***ரங்கா***வுக்கு எதிராக வழக்குத் தொடர எண்ணினர்.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ், காப்புரிமைச் சட்டத்தினால் பாதுகாப்பளிக்கப்பட்டுள்ள வேலைகளை ***விபரிக்குக.*** (05 புள்ளிகள்)

(b) காப்புரிமைச் சட்டத்தின் கீழ் ***ரங்கா*** ஏதாவது பொறுப்பினைக் (liability) கொண்டுள்ளாரா என்பது பற்றி ***விபரிக்குக.*** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

**RIO லங்கா PLC** இன் நிரந்தர ஊழியர்களான **நிமால், மாலனி மற்றும் ஆஷா** ஆகியோர் 2017 யூன் 30 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கம்பனியிலிருந்து விலகியிருந்தனர் (இராஜினாமாச் செய்திருந்தனர்). அவர்கள் தமது ஊழியர் சேமலாப நிதி (EPF) நன்மைகளைப் பெறுவதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்திற்கிணங்க பின்வரும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றின் கீழும் அவர்களால் தங்களுடைய EPF மீதியினைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதைக் காரணங்களுடன் **விபரிக்குக.**

(a) ***நிமால்,*** தனது சொந்த வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காக 50 வயதைப் பூர்த்திசெய்து கம்பனியிலிருந்து விலகியுள்ளார். (03 புள்ளிகள்)

(b) ***மாலனி,*** 2017 டிசெம்பரில் திருமணம் செய்வதற்காக கம்பனியிலிருந்து விலகியுள்ளார். (03 புள்ளிகள்)

(c) ***ஆஷா,*** ஒப்பந்த அடிப்படையில் வெளிநாட்டுக் கம்பனி ஒன்றில் வேலையொன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கம்பனியிலிருந்து விலகியுள்ளார். (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# <u>பகுதி D</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 10

(a) ***அமல்*** மற்றும் ***அமாலி*** ஆகியோர் 2012 இல் திருமணம் செய்துகொண்டதுடன் அவர்கள் 2016 டிசெம்பரிலிருந்து பிரிந்து வாழ்கின்றனர். அவர்கள் விவாகரத்துப் பெறுவது பற்றி யோசிக்கின்றனர். ***அமாலிக்கு*** மாதாந்தக் கொடுப்பனவாக ரூ.50,000/- வழங்குவதாக அவர்களுடைய மகனின் பிறந்த நாளில் ***அமல்*** வாக்குறுதியளித்துள்ளார். ***அமாலி*** அதனை எழுத்துமூலம் வழங்குமாறு கோரியதுடன், ''வாக்குறுதியளித்தபடி நீங்கள் கொடுப்பனவை வழங்காதவிடத்து உங்களை நீதிமன்றத்துக்கு அழைப்பேன்'' எனவும் அவரிடம் கூறியிருந்தார். மூன்றாவது மாதத்தின் பின்னர், அவர் கொடுப்பனவு வழங்குவதை நிறுத்தியிருந்தார். அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்போவதாக ***அமாலி*** அவரிடம் தெரிவித்திருந்தார். அதற்கு ***அமல்*** ''அதற்கு வாழ்த்துக்கள்! எந்தவொரு நீதிமன்றமும் கணவன் மனைவிக்கிடையில் ஒரு உடன்படிக்கையைச் செயற்படுத்த மாட்டாது'' எனக் கூறியிருந்தார்!''

''அத்துடன் நீங்கள் செய்வதற்கு எதுவுமில்லாமலேயே பணம் செலுத்திக்கொண்டிருக்கிறேன்! அன்பு என்றால் என்ன என்பதை ஊகித்துப் பாருங்கள் அத்துடன் குடும்பத்தைக் கவனித்துக்கொள்வது என்பது ஒப்பந்தம் ஒன்றிற்கான ஒரு சிறந்த கருதுகோளாகவும் இருக்காது!''எனவும் கூறினார்.

**அமலுடனான** இந்த வாதம் அவளுக்கு அதிக நிலைகுலைவு (upset) ஏற்படுத்த, கடைத்தெருவுக்குச் செல்வதற்காக **அமாலி** தனது மகனைத் தூக்கினாள். கடை ஒன்றின் கண்ணாடி வழியாக புதிய "கெட்ஜெட் மேன்" பொம்மையைக் கண்ட **அமாலியின்** மகன் அதனைத் தனக்கு வாங்கித் தரும்படி கேட்டான். இதனால் **அமாலி** அதிலுள்ள சிட்டையினைப் (label) பார்த்தாள். அதில் "அரைவாசி விலையில் விற்பனை! வந்து உங்கள் பொம்மையை அள்ளிக்கொள்ளுங்கள்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. **அமாலி** அதிலிருந்து ஒரு "கெட்ஜெட் மேன்" பொம்மையை எடுத்து அதன் விலையைக் கேட்டாள். அதற்கு கடைக்காரர் "இது ரூ. 20,000/- எனவும் இதனை ரூ.15,000/- இற்கு வாங்கிக்கொள்ள முடியும் எனவும் கூறினார். **அமாலி** இவ்விலை தொடர்பில் மகிழ்ச்சியடையாததால் அவள் அப்பொம்மையைத் திருப்பிக்கொடுத்துவிட்டு அப்பால் செல்ல முயன்றாள். கடைக்காரரோ "நீங்கள் இதனை தற்போது திருப்பித் தர முடியாது. நீங்கள் பொம்மையினை எடுக்கும்போதே ஒப்பந்தமொன்றைத் செய்திருக்கிறீர்கள்" எனக் கூறினார்.

(i) **அமல்** தொடர்பாகவும் (07 புள்ளிகள்)

(ii) கடைக்காரர் தொடர்பாகவும் (06 புள்ளிகள்)

**அமாலிக்கு** உள்ள சட்ட உரிமைகளை **ஆராய்க.**

(b) **பெரேரா** என்பவர் **சில்வாவுக்கு** கார் ஒன்றினை விற்பனை செய்தார். அவர் காரைப் பற்றி விபரிக்கும்போது அது *"அரிதாகவே பயன்படுத்தப்பட்டது எனவும் பெரும்பாலும் ஒரிஜினல் நிலையிலேயே இருப்பதாகவும் அது BMW ரகத்தின் மிகப் பிந்திய மாதிரி (latest model)"* எனவும் கூறியிருந்தார். **சில்வா** முழுப் பணத்தினையும் செலுத்தி காரினை எடுத்துக்கொண்டார். ஒரு சில நாட்கள் ஓடிய பின் கார் பழுதடைந்தது (broke down). **சில்வா** காரினை வண்டி பழுதுபார்க்கும் இடம் (கராச்) ஒன்றிற்குக் கொண்டுசென்றார். வண்டி பழுதுபார்ப்பவர் *"இது மோசமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு கார் எனவும் அவர்கள் என்ஜினை முற்றிலுமாகப் பாழாக்கி விட்டதால் அதனை நீங்கள் மாற்றீடு செய்யவேண்டும் எனவும் கூறினார். ஆயினும் இது ஒரு பழைய மாதிரியான (old model) கார் என்பதால் இப்பொழுதும் இத்தகைய என்ஜின்கள் தயாரிக்கப்படும் என தான் நம்பவில்லை"* எனவும் அவரிடம் கூறினார். அதற்கு **சில்வா** அவர்கள் "இக்காரினைத் தனக்கு விற்றவர் இது மிகவும் நல்ல நிலையில் இருப்பதாகக் தெரிவித்திருந்தார்" எனக் கூறினார். அதற்கு பழுதுபார்ப்பவர் சிரித்துக்கொண்டே "விற்பவர்கள் எதையும் சொல்வார்கள்! நீங்கள் காரினை வாங்குவதற்கு முன் அதனைச் சோதிப்பதற்கு முயன்றிருப்பின் அதிலுள்ள பிரச்சினைகளை இலகுவாகக் கண்டிருக்க முடிந்திருக்கும். நீங்கள் சரிபார்த்திருக்க வேண்டியிருந்தது!" எனக் கூறினார்.

அந்த நாளின் பின்னர், பரிச்சயமற்ற ஒரு நபர் **சில்வாவுக்கு** அழைப்பினை எடுத்து "நான் எனது காரினை வண்டி பழுதுபார்க்குமிடத்தில் கண்டு, அதுபற்றி அவர்களிடம் விசாரித்தபோது அக்காரின் உரிமையாளர் தாங்கள் என அவர்களிடம் நீங்கள் கூறியிருந்ததாக என்னிடம் தெரிவித்திருந்தனர். நான் அவர்களிடமிருந்து உங்களது தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக்கொண்டுள்ளேன், எதிர்பார்த் திருங்கள், நான் உங்களைப் பற்றி பொலிசில் தெரிவிக்கிறேன்! நீங்கள் ஒரு திருடன்!" எனக் கூறினார். இதனால் ஆச்சரியமடைந்த **சில்வா** தனக்கு அழைப்பினை மேற்கொண்டவருடன் கதைப்பதற்கு முடிவெடுத்ததுடன் **பெரேராவினால்** விற்கப்பட்ட காருக்கு **பெரேரா** உரிமையாளர் அல்ல என்பதை உணர்ந்துகொண்டார். அழைப்பை மேற்கொண்ட காரின் உண்மையான உரிமையாளர் **பெரேராவின்** மைத்துனர் ஆவார்.

ஒரு வாங்குபவராக (கொள்வனவாளராக) **சில்வா**வுக்குக் கிடைக்கக்கூடிய உரிமைகளையும் தீர்வுகளையும் (rights and remedies) பற்றி **ஆராய்க.** (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |